DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : MC 7/2024
Miscellaneous :
Sessions : PW1
Deposition of Witness for

**எதிர் மனுதாரர் ஆஜர்**

| | |
|---|---|
| Name | விஷ்ணுஸ்ரீ |
| Father / Husband Name | லோகரஞ்சன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **17.04.2026**

**குறுக்கு விசாரணை**

1. நான் தற்பொழுது வண்டலூரில் உள்ள டாக்டர் அப்துல் ரகுமான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியல் ஆங்கிலத்தில் முனைவர் பட்டம் படித்து வருகிறேன் என்றால் சரிதான். TN 19 BV 2236 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசிக்கி கார் என் தாயார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 03.08.2022 ல் அச்சிறுபாக்கத்தில் சார்பதிவாளர் எல்லைக்குட்பட்ட மருவூர் அவென்யூ என்ற பகுதியில் 1200 சதுரஅடி ரூபாய் 487400 தொகைக்கு நான் வாங்கியுள்ளேன் என்றால் மேற்படி இடம் எனது பெயரில் தான் உள்ளது. ஆனால் அதனை நான் வாங்கவில்லை. அன்றைய தேதியில் என் அக்கா தீபபிரியா என்றவர் பெயரில் 1200 ச.அ கொண்ட காலி மனை வாங்கப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என் தந்தை ஓட்டுநராக எங்கு பணிபுரிகிறார் என்றால் தனியார் பள்ளியில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். எனது அம்மா செங்கல்பட்டு மாவட்டத்தில் அரசு தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

2. கடந்த 06.04.2022 ம் தேதி எனது அக்கா தீபபிரியா என்பவரின் திருமணம் செங்கல்பட்டு GST சாலையில் அமைந்துள்ள கிருஷ்ணமகால் என்ற திருமண மண்டபத்தில் எனது பெற்றோர் சம்மதத்துடன் நடந்தது என்றால் சரிதான். மேற்படி திருமணம் எனது குடும்பம் சம்பிரதாயப்படி எனது பெற்றோர் செலவில் நடந்தது என்றால் சரிதான். எனது சகோதரியின் மாமனார் அரக்கோணத்தில் வழக்கறிஞராக உள்ளாரா என்றால் இல்லை. அவர் வழக்கறிஞர் படிப்பு படித்து வருகிறார். எனது கணவர் புதுச்சேரி மாவட்ட தலைமை நீதிமன்றத்தில் முதுநிலை எழுத்தராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எனது அக்காவின் திருமணத்திற்கு 6 மாதத்திற்குள் எனது திருமணம் நடத்தியதால் மேற்படி திருமண செலவை ஏற்று எதிர் மனுதாரர் பாண்டிச்சேரியில் திருமணத்தை நடத்தினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.திருமணத்தின் நிச்சயதார்த்தத்தை எனது பெற்றோர் ஆடம்பரமாக செய்து வைத்ததாக புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் மேற்படி

நிகழ்ச்சிக்கு ஏற்பட்ட செலவுத்தொகை எவ்வளவு என்றும் ஆடம்பரமாக என்ன நிகழ்ச்சி நடத்தது என்றும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. எனது பெற்றோர் எந்த வங்கியில் இருந்து பணம் கடன் வாங்கி எனது திருமண செலவு செய்தார்கள் என்று நான் தாக்கல் செய்துள்ள புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர் எனது திருமணத்திற்காக யாரிடம் எவ்வளவு தொகை கடனாக வாங்கினார்கள் என்று நான் தாக்கல் செய்துள்ள புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர் மனுதாரரின் தாயார் பாண்டிச்சேரியில் அரசு ஊழியராக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக எனது திருமணத்திற்காக வங்கியில் இருந்து பணம் எடுத்தும் கடன் பெற்றும் செலவு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர் எனது திருமணத்திற்காக கடன் வாங்கியதாக சொல்லியுள்ளதால் மேற்படி கடனை செலுத்தி வருவதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர் மனுதாரர் மற்றும் அவரின் தாயார் அரசு ஊழியர் என்பதால் நான் பணம் கிடைக்கும் என்ற உள் நோக்கத்தில் அவரை வற்புருத்தி திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு போதிய பண வசதி இருந்தும் எதிர் மனுதார் அரசு ஊழியர் என்பதால் எங்கள் குடும்ப வழக்கப்படி நாங்கள் திருமண செலவை ஏற்காமல் எதிர் மனுதாரரை செலவு செய்ய வைத்தோம் என்றால் சரியல்ல.

**(எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**